கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 214/2018

வாதி தரப்பு சாட்சி - 3 தஞ்சம்மாள் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 17.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தஞ்சம்மாள் | கிராமம் | |
| த/பெ | சுப்ரமணியன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 65 |

**வா.சா. 3 - தஞ்சம்மாள் - முதல் விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வாதி தரப்பில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததின் அடிப்படையில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனது ஊர் மருதூர் கிராமம், மேட்டு மருதூர். வாதி கமலம் எனது மாமா மகள் ஆவார். வாதியின் சித்தப்பா மகள் பெயர் அகிலாம்பாள். அவர் இவ்வழக்கின் 5 ம் பிரதிவாதி ஆவார். மேற்படி இரு நபர்களுக்கும் பாத்தியப்பட்ட தாவா சொத்து குளித்தலையில் உள்ளது. தாவா சொத்து சம்மந்தமான பத்திர நகலை நான் 5 ம் பிரதிவாதிக்கு எடுத்துக் கொடுத்தேன். மேற்படி 16.03.2009 ம் தேதியிட்ட மேற்படி பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி எனக்கு சொந்தம் என்பதால் அவரின் உறவினர்களையும் எனக்கு தெரியும். அவரின் உடன்பிறந்தவர்கள் ராமசாமி என்ற ஒருவர் உள்ளார். மேற்படி ராமசாமி தற்போது உயிருடன் இல்லை. மேற்படி ராமசாமி திருமணத்தின் பின்னிட்டு குளித்தலையில் இல்லை. அவர் திருமணத்திற்கு பிறகு அவரது மாமியார் வீடான திருச்சி மாவட்டத்தில் உள்ள கிளியநல்லூர் என்ற ஊருக்கு சென்றுவிட்டார்.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**